ஸ்ரீ குருப்யோநம :

ஸ்ரீ சத்திய போதினி.

பரமபத மார்க்கம்.

OF THE REGISTRAR

இஃது

ஓமலூர் சன்மார்க்க சங்கத்தின் இரண்டாவது வருட
பூர்த்தி மஹோத்ஸவத்தில் ஸ்ரீமான் புஷ்பால
வீரராகவ சுவாமிகள் த்விதிய புத்திரரான ஸ்ரீமான்
பெருமாள் தாசர் என்று தன் குருவால் திருநாமம்
சூட்டப்பெற்ற ஓமலூர் சப்-போஸ்ட் மாஸ்டர்

ஸ்ரீமான் புஷ்பால

வரதராஜுலு நாயுடுகாரு

அவர்களால்

ஆந்திரபாஷையில் உபந்நியாசம் செய்ததை

ஷை

சன்மார்க்க சங்கத்தின் அங்கத்தினரான

ஸ்ரீமான் C. பழனிசாமி பண்டிதர் அவர்களால்

தமிழில் மொழி பெயர்த்து

ஓமலூர் சப் - ரிஜிஸ்ட்ரார்

மகா-ா-ா-ஸ்ரீ C. K. நரசிம்ஹுல ராஜா

அவர்களால்

பரிசோதிக்கப்பட்டு

ஷை சன்மார்க்க சங்கத்தாரால்
சேலம் ஷண்முகவிலாஸ அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

...ராக்ஷஸ ௵ ஆவணி மீ.

சுபமஸ்து.

ஸ்ரீ சத்திய போதினி.

பரமபத மார்க்கம்.

முகவுரை

இந்தச் சன்மார்க்க சபையில் நிறைந்திருக்கும் கனதனவான்களுக்கும், பரம பாகவதாளுக்கும், பண்டிதர்களுக்கும் அடியேன் மனப்பூர்வகமான வந்தனம்.

அடியேனை இச்சபையார்கள் சத்தியம் என்னும் விஷயத்தைப் பற்றிப் பிரசங்கிக்க விரும்பியபடியால் இந்தவிஷயம் மஹா மகிமை பொருந்தியதும் மகான்களால் சொல்லக்கூடியதுமானதாலும் சத்தியத்தினாலேயே இவ்வுலகம் நிலைநிற்கிறது என மேலோர்களால் சொல்லப்பட்டிருக்கிறபடியாலும் இச்சிரேஷ்டமான விஷயத்தை அடியேன் கல்வி கேள்விகளால் என் சிற்றறிவுக் கெட்டியவாறு சொல்லுகிறேன். அதின்கண் ஏற்படும் சொற்குற்றம் பொருட்குற்றம் இவைகளை நீக்கி குணங்களைமாத்திரம் கிரகித்துக்கொள்ள வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்,

பெருமாள் தாசன்.

சாற்றுக்கவி.

ஓமலூர் தாலூகா, வெள்ளாளப்பட்டி, பண்டித பரம்பரை,

ப்ரம்ஹஸ்ரீ சாமய்யர் அவர்கள்

குமாரராகிய

எஸ். கிருஷ்ணசாமய்யர் அவர்களால்

இயற்றப்பட்டது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பூமணக்கு மெழினலஞ்சூழ் பூமணக்கும் புத்கலத்திற்
புகழ்பெற் றோர்க்கு
நாமணக்கு மெழினலஞ்சூழ் நாமணக்கப் பிறந்தநரர்
நலத்தை வேட்டுந்
தேமணக்கு மூவகையுற் றேமணக்கத் தெரிந்தவையிற்
சிறந்த தான
தூமணக்கு மெய்ம்மையெனத் தூமணக்கு மெய்ச்சுருதி
சொல்லு மாதோ. (1)

சொல்லரிய மெய்ம்மையியற் றொல்லுலகி லியாவருக்குந்
துணையாய் நிற்ப
நல்லபுக ழாந்திரத்தி லொருநூலை யிவ்வுலகி
னாட்டி வைத்தான்
பல்லரிய பக்திநெறி யோகதத்துவ ஞான
பாரா மார்த்தன்
வல்லயனே கரவசலன் மாபெருமாள் தாசனெனும்
மகிமை யோனே. (2)

சந்தமிகு பாவியலி லாந்திரத்திற் ருருக்கவிந்தச்
சத்ய நூலைச்
செந்தமிழின் மொழிபெயர்த்துச் செந்தமிழோர் நன்கறியத்
தெளிய வைத்தான்
மந்திரத்திற் சுடைந்தெடுத்த வானமுதை யுலகிலிடு
மாத வன்றுள்
சிந்தனைசெய் யருங்குமா னருள்பழனிச் சாமியெனும்
செம்ம லன்றே. (3)

முற்காலத் தரிச்சந்த்ரன் முதலானு னம்மொழிகண்
முழுது மோர்ந்து
பிற்காலத் தாந்திரத்திற் பேசிவைத்த பெருமாளும்
பெரிய ஞானன்
தற்காலத் தம்மொழியைத் தமிழிலெழு தியபழனிச்
சாமி சொல்லை
நற்கால மெனக்கேட்டு நாமெல்லா நறையுண்ட
நளின மானோம். (4)

வேறு. (குறள் வெண்பா.)

சத்திமிகுஞ் சத்தியமே தானுகர மாந்தர்பெறு
மூத்திக்கு மூல மது. (5)

தோரமங்கலம், தமிழ்வித்வான்,

மகா-ா-ா-ஸ்ரீ அ. வரதநஞ்சய பிள்ளை அவர்களால்

இயற்றியன.

வெண்பா.

தேமலூர் கொங்கைத் திருவுடனே நாமகள்வாழ்
ஓமலூர்ச் சங்கத் துவந்திதையல்—லாமலோர்
மிக்கபிரசங்கமிலை யென்ன விரித்துரைத்தான்
றக்கபுகழ்ச் சத்தியத்தைத் தான். 1

மன்னும் புட்பால வரதராஜேந்திரன் சொற்
பன்னுந் தெலுங்கைத் தமிழ்ப்படுத்துத்—துன்னியசீர்த்
தாலம் புகழ்பழனிச் சாமிபகர்ந்தானுயர்ந்த
சீலமுடையாரறியத் தேர்ந்து. 2

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

முத்தி காணுநெறி யுற்ற காதலர்மு தற்கண் மாகடவு ளாரடிப்
பத்தியா லுருகி நிற்றலா லறிவு பற்றியா துமறி வற்றுநேர்
வைத்த யோகநெறி யிற்குலாவு மன மற்றுமா மகிமை யுட்கொளா
நித்த ஞானசுக கர்த்தரா யனுப வத்தினுநிகழ்தல் சத்யமே.

ஸ்ரீ சற்குருவேநம :

ஸ்ரீமான் பெருமாள்தாசர்
திருவாய்மலர்ந்தருளிய

ஸ்ரீ சத்திய போதினி.

பரமபத மார்க்கம்.

சத்சங்க சன்மார்க்க சபை மகத்வம்.

பாரதம்.

(కం) శ్రీనొసగు యశము వెంచున నూనప్రదంబు సేయు నురుదోషంబుల్
వోనడచు కరమవిమల జ్ఞానము మెరయించు సాధు సంగతి దలపన్

(க) ஸ்ரீகொஸகு யஸமு வெஞ்சுன ஞானப்ரெமதம்புஸேயுநு ருதோஷம் புல்-வோனடசு கரமவிமலக்ஞானமுமெ ரயிஞ்சுஸாது சங்கதிதலபன்.

இதன் பொருள்.

இச்சன்மார்க்க சபையின் மகிமையால் நமக்கு சகலசம்பத்து களும் அதிக சந்தோஷமும் சுத்தஞானமும் சித்திக்கும் சகல தோஷங்களும் நீங்கும் என்பதாம்.

ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் வாக்கியம்.

(శ్లో) సత్సంగత్వే నిస్సంగత్వం నిస్సంగత్వే నిర్మోహత్వం
నిర్మోహత్వే నిశ్చలతత్వం నిశ్చలతత్వే జీవన్ముక్తిః

(சு) ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம் நிஸ்ஸங்கத்வே
நிர்மோகத்வம் நிர்மோகத்வே நிஸ்சலதத்வம்
நிஸ்சலதத்வே ஜீவன் முக்தி.

இதன் பொருள்.

சத்சகவாசத்தால் பாமரர்களின் சகவாசம் நீங்கும். அச்சக வாசம் நீங்கியதால் மோகமென்னும் ஆபாசங்கள் நசிக்கும். அம் மோகாபாசங்கள் நசிக்க மனமானது ஸ்திரமடையும். அவ்வித மனதின் ஸ்திரமே ஜீவன் முக்திக்கு ஏதுவாகும்.

இப்படிப்பட்ட சபைக்கு எத்தகையோர்கள் சகாயமாயிருப் பார்களென்றால் (அதற்கு திருஷ்டாந்தம்).

பகவத்கீதை மகத்வம்.

(శ్లో) సర్వే దేవాశ్చ ఋషయో యోగినః పన్నగాశ్చయే గోపాల గోపికావాపి
నారదోద్ధవపార్షదైః సహయో జాయతే శీఘ్రం యత్ర గీతా ప్రవర్తతే.

(சு) ஸர்வெ தேவாஸ்ச ருஷயோ யோகினஃ பன்னகாஸ்சயே கோபால கோபிகாவாபி நாரதோத்தவ பார்ஷதைஃ ஸஹயோஜாய தே சீக்ரம் யத்ர கீதா ப்ரவர்த்ததே.

இதன் பொருள்.

எவ்விடத்தில் சத்விஷய வாசிப்பும் சம்பாஷணையு மிருக்கின் றதோ அவ்விடத்தில் தேவர்களும் ரிஷிகளும் யோகிகளும் வாசுகி யென்னும் சர்ப்பாதிகளும் கோபாலனும் கோபிகைகளும் நாரதாதி மகாரிஷிகளும் சபைச்குச்சகாயமாயிருப்பார்கள்.

இப்படிக்கிருப்பதால் இச்சன்மார்க்க சபையில் கூடியிருக்கிற பாகவதர்களுக்கு மேல்சொல்லப்பட்ட மகத்வத்தில் காட்டிய சகல தேவர்கள் ரிஷிகள் முதலியவர்களின் சகாயமும் சுத்தஞானமும் நிர்பலசுகமும் கிடைக்குமென்பதிற் சந்தேகமில்லை. இச்சன்மார் க்கசங்கத்தோரும் அவ்வம்சத்தைச் சார்ந்தவர்களேயாம்.

பிரபஞ்சத்தில் எது சாசுவதம் என்று விசாரிப்பது.

(ఉ) భోగే రోగభయం కులే చ్యుతిభయం విత్తే నృపాలాద్భయం మానే దైన్యభయం బలే రిపుభయం రూపే జరాయా భయం శాస్త్రే వాదభయం గుణే ఖలభయం కాయే కృతాంతాద్భయం సర్వం వస్తు భయాన్వితం భువి నృణాం వైరాగ్యమేవాభయం,

போகே ரோகபயம் குலேச்யுதிபயம் வித்தேந்ருபாலாத் பயம் மானே தைன்பபயம் பலேரிபுபயம் ரூபே ஜாரயாபயம் சாஸ்த்ரே வாதபயம் குணே கலபயம் காயேக்ருதாம் தாத்பயம் சர்வம் வஸ்து பயான்விதம் புவிந்ருணும் வைராக்யமே பாவயம்.

இதன் பொருள்.

போகங்களால் ரோகபயமும் குலத்தால் அதன் க்ஷீணபயமும் தனத்தால் ராஜபயமும் மானத்தால் அதன் குன்றுதலின் பயமும் பலத்தால் எதிரிகள் பயமும் ரூபத்தால் தேகதளர்ச்சி பயமும் குணத்தால் அதன் கெடுதலின் பயமும் காயத்தால்மிருத்யுபயமும் இவ்வித சகலமும் பயரூபமாயிருப்பதால் வைராக்யமே ஸ்திரமானது.

வேமனஸ்வாமிகள் வாக்கியம்.

(౯౦) ఆత్మశుద్ధిలేని యాచారమదియేల భాండశుద్ధిలేని పాకమేల
చిత్తశుద్ధిలేని శివపూజయేలరా విశ్వదాభిరామ వినరవేమ

(க) ஆத்ம சுத்திலேனி யாசாரமதியேல பாண்டசுத்திலேனி பாகமேல சித்தசுத்திலேனி சிவபூஜ யேலரா விஸ்வதாபிராம விநுர வேமா.

இதன் பொருள்.

ஆத்மசுத்தியில்லாத ஆசாரத்தினால் பிரயோஜனமில்லை, சுத்த பாத்திரத்தில் செய்யாத சமயல் உபயோகமில்லை சித்தசுத்தியில்லாமல் செய்யும் சிவபூஜையால் எவ்வித பிரயோஜனமும் இல்லை.

என்றவாறு.

சத்தியம் என்பதைப்பற்றி சிலர் அபிப்ராயம்.

(శ్రు తి,) సత్యం జనవిరోధంచ అసత్యం జనరంజనం

(சு) ஸத்யம் ஜனவிரோதஞ்ச அசத்யம் ஜனரஞ்சனம்,

இதன் பொருள்.

சத்தியம் பேசுவதால் ஜனங்களுக்கு அக்காலத்தில் விரோதமும் பொய் பேசுவதால் அப்போது விருப்பமும் திருப்தியும் ஆகின்றது.

மனுஸ்மிருதி சுலோகம்.

(శ్లో) కామినీషు వివాహేషు గవాంభక్ష్యేతథేంధనే
బ్రహ్మణాభ్యుపపత్తౌచశపథేనాస్తిపాతకం.

(சு) காமினீஷு விவாஹேஷு கவாம்பக்ஷ்யதே தேந்தனே
ப்ராஹ்மணாப்யுப பத்மௌச சபதே நாஸ்தி பாதகம்.

இதன் பொருள்.

கல்யாணங் கூட்டுவிதற்காகவும் பசுக்களின் உணவுக்காக புல் பூண்டுகளை சேகரிப்பதற்கும் பிராம்மண சகாய விஷயமாயும் பொய் சொல்வதால் பாபமில்லையென்று சொல்லப்பட்டிருக்கிறது.

பாகவதம்.

(ఉ) భూతహితంబుగా పలుకు బొంకునుసత్యఫలం బునిచ్చు దద్భూతభయా
స్పదంబగు ప్రభూతపుసత్యము బొంకునట్లు ప్రాణాతురులైనచో బరిణయంబులయం
దును బల్కుబొంకు నత్యాతిసయంబయంన్రు మహితాత్మక యిట్టివి ధర్మసూక్ష్ముల్

(உ) பூதஹிதம் புகா பலுகு பொங்குனு சத்யபலம் புனிச்சு
தத்பூத பயாஸ்பதம்பகு ப்ரபூதபு ஸத்யமு பொங்குநட்லு
ப்ராணாதுருடைனசோ பரிணயம்புலயந்துனு பல்குபொங்கு
சத்யாதிசயம்பயன்று மஹிதாத்மக யிட்டிவி தர்மசூக்ஷ்மமுல்

இதன் பொருள்.

பிராணிகளுக்கு இதமாகும்படி சொல்லும்பொய்யானது சத்ய பலத்தையே கொடுக்கும். அப்பிராணிகளுக்கு பிராணாபத்து வரும்படி சொல்லும் சத்தியம் அசத்தியமாகவே கொள்ளப்படும் பிராணாபத்து நீக்கச் சொல்லும் பொய்யும் ஆகிய இவைகளை சத்தியமென்றே கொள்ளப்படும்.

பாகவதம்.

(గీ,) ప్రాణహాని దప్పించుచో బరిణయంబు నందుగురుజన కార్యార్థమ యుక్త
సంగ నాజనులతోడి సంభాషణమున సర్వధనమును నెడియెడు నెడ బొంకజనున్నృపాలా.

(கி) ப்ராணஹானி தப்பிஞ்சு சோ பரிணயம்பு னந்து குரு ஜன கார்யார்த்த மப்பு நங்க ஞஜனுலகோடி சம்பாஷண முநசர்வ தநமுநு செடிபெடுகெட பொங்கஜனு ந்ருபாலா,

இதன் பொருள்.

பிராணபாயத்தை நீக்கும்பொருட்டும் விவாகம் நடத்திவை ப்பதற்கும், பெரியோர் குரு முதலிய மகான்களோடு ஏதேனும் காரியங்களை உத்தேசித்து சம்பாஷணைசெய்யும்போதும் நம்மு டைய தனம் நஷ்டமடையுங்காலத்தும் பொய் சொல்லலாம்.

மேற்கூறிய நீதிவாக்கியங்கள் யாவும் லோக போக பாக்கியங் களைக்கோரும்ஜனங்கள் அனுசரிக்கும் மார்க்கங்களேதவிர மோக்ஷ மார்க்கத்தை யாசரிக்கும் குணவிவேகிகட்கன்று. ஏனெனில்— எவ்வளவுகாலம் இப்பொய்களைச் சொல்லிவாழக்கூடும் எல்லாமே அனித்தியமானபடியால் பொய் சொல்லுவது அனுசிதமே.

பாகவதம்,

• (శా) కారేరాజులు రాజ్యముల్ గలుగదే గర్వోన్నతిం జొందరే వారేరీ సిరి
మూటగట్టికొని పోవం జాలిరే భూమిపై బేరైనంగలదే శిబిప్రముఖులుం బ్రీతిన్
యశః కాములై యీరే కోర్కులు వారలన్ మరచిరే యిక్కాలమున్ భార్గవా

காரேராஜுலு ராஜ்யமுல்கலுகதே
கர்வோன்னதிம் பொந்தரே
வாரேரி சிரிமூடகட்டிகொனி
போவஞ்ஜாலிரே
பூமிபைபேரைனம் கலதே
கிபிப்ரமுகுலும் ப்ரீதின்யஸ:
காமுலை யீரேகோர்குலு
வாரலுன்மரசிரே
இக்காலமுன் பார்க்கவா.

இதன் பொருள்.

ராஜாக்கள் தங்கள் மமதையினால் இதரராஜாக்களோடு போர் புரிந்துச் சேர்த்துவைத்த அருமையான சொத்துக்களை தன் மரண

காலத்தில் கூடக்கொண்டுபோயிருக்கிறார்களா? இல்லை. ஆகையால் தங்கள் கோரிக்கை தீர்த்துக்கொள்வதற்காக வீரத்வம் பொருந்திய ராஜாக்கள் பலர் ரணக்களத்தில் மடிந்தும் பலர் ஜெயித்தும் கீர்த்திபெற்று வாழ்ந்துவரும் ராஜாக்கள் எவரும் இவ்வுலகத்தில் இல்லையன்றோ? அவர்கள் நாமதேயமும் மறைந்துபோயதென்பது உலகப்ரசித்தமாம்.

ஆகையால் சாஸ்வதமானது எதுவென்று மேல்சொல்லிய நீதிவாக்கியங்களின்படி சில காரியங்களில் அவைகளுக்கு வேண்டிய பொய்களை மாத்திரம் சொல்லலாமென்றாலும் அதையும் ஆழ்ந்து யோசிக்கின் அந்தப்படி பொய்சொல்லி எத்தனைக்காலம் பூமியில் பிழைக்கப்போகிறோம். அப்படிக்குப் பொய்சொல்லி ஒருவனுக்கு அநுகூலம்செய்யும்பக்ஷத்தில் சாக்ஷாத் கடவுளுக்கும் அவரது கட்டளைக்கும் நமது மனசாக்ஷிக்கும் விரோதமாய் ஒருவனுக்குப் பொய் சொல்லியதால் அவனுக்குக்கூடிவரும் சித்தியானது கடவுள் கட்டளைக்கு நேர்விரோதமானது. இல்லையேல், சத்தியத்திற்குமகிமையென்ன? சத்தியமாய் நாம் ஏன் நடக்கவேண்டும்? நம்மாலேயே எல்லாம் நடக்கும்படி நாம் செய்துகொள்ளலாம் அல்லவா? ஆகையால் மேற்கூறிய வாக்கியங்களின்படி பொய்சொல்லக்கூடாதென்பதே சித்தாந்தம்.

இதற்கு உதாரணமாக ஸ்ருதி.

(శ్లో) అస్థిరం జీవనం లోకే అస్థిరం యౌవనంధనం అస్థిరం దారపుత్రాది ధర్మకీర్తి ద్వయం స్థిరం

(சு) அஸ்திரம் ஜீவனம் லோகே அஸ்திரம் யௌவனம்தனம்
அஸ்திரம் தாரபுத்ராதி தர்மகீர்த்தி த்வயம் ஸ்திரம்.

இதன் பொருள்.

அருமையான பிழைப்பும் அருமையான தனங்களும் ஆயுளும் மனையும் பெண்சாதி பிள்ளை ஆகிய இவர்கள் நிச்சயமாகுமா? (ஆகாதென்றபடி). இவ்வுலகத்தில் சத்காரியங்களை எண்ணி யோசித்துச் செய்யக்கூடியவைக் கீர்த்தி இவைகளே நிலைக்கும் என்றபடி.

இதற்குத் திருஷ்டாந்தம்.

மஹாபலிச் சக்ரவர்த்திக்குச் சுக்ரோசாரியார் சொல்லிக் கொடுத்த பொய் வாக்கியத்திற்காக அவர் அடைந்த ஸ்திதிவருமாறு—

பாகவதம்.

(ఉ) భూతలమందు స్త్రీలయెడ బుణ్యవివాహములందు బ్రాణము౯
భూతియుమానముం జెడు పొందునగోద్విజరక్షణార్థమై
నీతియడంచు బొంకుముని చేర్పినశుక్రుని నీతినవ్వి
సన్నుతిగ మెచ్చిరిమ్మునులు నీకృతిలోన విశుద్ధనీతిని౯

(உ) பூதலமந்து ஸ்திரீலயெட புண்ய விவாகமுலந்து பிராணமுன்
பூதியுமான முஞ்ஜெடு பொந்துனகோத்விஜரக்ஷரார்த்தமை
நீதியடஞ்சு பொங்குமனி நோர்ப்பின சுக்ருனி நீதிநவ்வி
ஸந்நீதிக மெச்சிரிம்முனுலு நீக்ருதிலோன விசுத்தநீதிநின்

இதன் பொருள்.

ஜீவகோடிகளிடத்தும் ஸ்திரீகளிடத்தும் விவாகங்களைக் கூட்டுவைக்குமிடத்தும் பிராணாந்திய காலத்தில் அதைத் தப்பிக்கும் பொருட்டும் தனம் பூமி இவைகளில் அதிக சேதம் நேரிடும் போதும் மானஹானிகாலத்தும் பசுக்களை ரக்ஷிக்கும்பொருட்டும் சொல்லப்பட்ட பொய்கள் அனைத்தும் சத்தியமே என்று சுக்கிராசாரி பலிச்சக்ரவர்த்திக்குப் போதித்த வாக்கியங்களைகேட்டு ரிஷிகள் நகைத்து சுக்கிராசாரியரை அகௌரவப்படுத்தியதாக சொல்லப்பட்டிருக்கிறது.

தவிர கர்ம புராணத்தில்

(కం) పంచమహాపాతకముల కంచితవిధిగలదు ధాత్రినన్నృతం, బాపాడించిన దుష్క
ర్ములకొక్కించుక గతిలేదు నరకమే యూహింప౯

(க) பஞ்ச மஹா பாதகமுலு கஞ்சித விதிகலது தாத்ரிநந்ருதம்
பாபாதிஞ்சின துஷ்கர்முல கொக்கிஞ்சுக கதிலேது
நரகமே யூகியம்பன்.

இதன் பொருள்.

பிராணுபத்து நேர்ந்த காலத்தும் பொய்யைவிட்டு சந்திய மே சொல்வாஞகில் அவன் புண்ணிய புருஷனுவான் தவிர பொய் யை உற்பத்தி செய்து சொன்னுலும் ஒருவர்மேல் வீண் அபவாத மாய்ப் பொய்சொன்னுலும் அப்படிப்பட்டவர்களுக்கு நரகமே யன்றி வேறுகதியில்லை என்றவாறு.

ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகள் வாக்கியம்.

భజగోవింధం

(శ్లో) కురుతేగంగా సాగరగమనం వ్రతపరిపాలన మథవాధానం
జ్ఞానవిహీన స్సర్వమతేన ముక్తోనభవతి జన్మశతేన

(சு) குருதே கங்கா சாகரகமனம் விர்தபரிபாலன மதவாதானம்
ஞானவிஹீன ஸ்ஸர்வமதேன முக்தோனபவதிஜன்மசம்தன

இதன் பொருள்.

கங்காயாத்திரை செய்தாலும், சமுத்திர ஸ்நானம் செய்தா லும், அநேக விருதங்களை அனுஷ்டித்தாலும் எவ்வளவுதான் தரு மங்கள் செய்தாலும் சத்தியமில்லாவிடில் மேற்கூறிவைகளால் உபயோகமில்லை யென்பதாம்.

பாகவதம்.

(గీ) చేతులారంగ శివుని పూజింపడేని నోరునొవ్వంగ హరికీర్తినుడువడేని
దయయు సత్యంబు లోనుగదలపడేని కలుగనేటికితల్లుల కడుపుచేటు

(கி) சேதுலாரங்க சிவுணி பூஜிம்படேணி நோருநொவ்வங்க
ஹரிகீர்த்திநுடுவடேணி தயயு சத்யம்பு லோனுக தலபடேணி
கலுகநேடிகி தல்லுல கடுபுசேடு.

இதன் பொருள்.

தன்கையார சிவபெருமானை பூஜிக்காதவனும் தன்வாயார ஹரி கீர்த்தனையை பஜிக்காதவனும் சத்தியம் தயை இவைகளை

நினைக்காதவனும் ஆகிய இவர்கள் ஜனிப்பது தாய்மார்களின் வயிற்றுக்கேடென்றே சொல்லவேண்டும் என்றவாறு.

பகவத்கீதை.

(శ్లో) బహూనాం జన్మనామంతే జ్ఞానవాన్మాం ప్రపద్యతే
వాసుదేవస్సర్వమితి సమహాత్మా సుదుర్లభః

(சு) பஹூநாம் ஜன்ம நாமந்தே ஞானவான் மாம்ப்ரபத்யதே
வாசுதேவஸ்ஸர்வமிதி சமஹாத்மா. சுதுர்லப:

இதன் பொருள்.

ஸ்ரீ கிருஷ்ணன் அர்ச்சுனனுக்குச் சொன்னதாவது ஹே அர்ச்சுனா! சத்யவந்தனாவது சுலபமென்று நினைக்காதே கர்மவசத்தால் ஜீவர்கள் அநேக ஜென்மங்களை யெடுத்து புண்ணிய கர்மத்தினால் சத்தியவந்தனைப் ஜனிப்பான். அத்தகைய சத்தியவான் கிடைப்பது அரிது என்றவாறு.

இப்படியிருக்க இகத்திலும், பரத்திலும் கெடுக்கும் இம்மகா கொடிய பொய்யை நாம் ஏன் சொல்லவேண்டும். நான்கு வேதங்களின் சாராம்சத்தை ரிஷிகள் சொல்லியிருப்பது எப்படியென்றால்,

(శ్రుతి) జంతూనాం నరజన్మదుర్లభమతః

(சு) ஜந்தூனாம் நர்ஜன்ம துர்லபமத:

இதன் பொருள்.

இப்பிரபஞ்சத்திலுள்ள ஜீவராசிகளில் மானிட ஜென்மமாய் பிறப்பது அரிது என்பதாம்.

இதற்கு உதாரணமாக.

பாகவதம்.

(శ్లో) సంపతంతే దేహజాలాని కదాచిద్ధి మానుషే
బ్రహ్మణ్యాం ప్రాప్య తేజంతుః తత్పుత్ర పరిపాలయా

(சு) சம்பதன்தேகஜாலானி கதாசிதிஹமானுஷே
பிரப்ஹண்யப்ராப்யதேஜந்துஹூதத்புத்ர பரிபாலயா.

இதன் பொருள்.

உலகத்தில் எண்ணிறந்த ஜீவராசிகளிருக்கின்றன. அவைக ளில் பிறந்தபின்பே இந்த ஜீவன் நரதேகமடையும். அந்த நர ஜெனனமே தன்மைபொருந்திய பிரம்மஞானத்தையறியக்கூடியது. ஆகையால் மைந்தா இந்த கண்ணியமான தேகத்தை மேன்மை யாய் பாவித்து ஜாக்கிரதையாய் காப்பாயாக.

ஆகையால் நாம் பூர்வஜென்மத்தில் செய்த புண்ணியபலத்தால் இம்மானிட ஜென்மமெடுக்கப்பட்டது. இச்செனனத்தில் சத்திய மார்க்கத்திலேயே காலம் கழித்தால் இனி வரப்போகிற ஜன்மத்தி லும் சத்தியவானுன உத்தமஜென்மம் கிடைக்குமென்பதில் சந்தே கமில்லையாகையால் சதா சத்தியமாகவே காலத்தை கழிக்கவேண் டுமென்பதாம். (இதற்கு சமாதானம்) உபநிஷத்

(శ్లో) సత్యేనవాయుర్వాతి సత్యేనాదిత్యోరోచతే
దివిసత్యం వాచప్రతిష్ఠా సత్యేసర్వం ప్రతిష్ఠితం
తస్మాత్సత్యం పరమం వదంతి

(சு) ஸத்யேந வாயுராவாதி ஸத்யேநாதித்யோரோசதே
திவிசத்யம் வாசப்ரதிஷ்டா சத்யேசர்வம் ப்ரதிஷ்டிதம்
தஸ்மாத் சத்யம் பரமம் வதந்தி.

இதன் பொருள்.

சத்யத்தினுல் காற்று வீசுகின்றது. சத்தியத்தினுல் ரவி ஆகா யத்தில் பிரகாசிக்கிருன். சத்தியத்தால் வாக்கு சப்திக்கின்றது. எல்லாம் சத்தியபலமேயாகையால் சத்தியத்திற்கு மேலானதர்மமே கிடையாதாம் என்றவாறு.

இரண்டாவது உதாரணம் நீதிவாக்கியம்.

(ప) కులసతి భాసినఁ సుతుడు కూలిన నాపదలెన్నివచ్చి తన్నలమిని మాన భంగమయిఁ సిరిపోయిన రాజ్యమూడినఁ చెలులుత్యజించినఁ దుదక సింగాని ప్రాణ ముతీయ వచ్చినం బలుకగరాదు ధూవేయము మాత్రమ సత్యము మర్త్యుడెప్పుడుఁ

(ச) குலசதி பாசினன் சுதுடுகூலின ஞபதலென்னிவச்சினன்ன வயினி மானபங்கமயின் விரிபோயின ராஜ்யமூடினன் செலுஞதவ ஜின்சினன் ஆதகசிங்கொ நிப்ராணமு தீபவச்சிரம் பலுக்கக்ககராது சூவேயணுமாத்ர மசத்யமு மர்த்தியுடெப்புடுன்.

இதன் பொருள்.

தன் பெண்சாதி விலகினாலும், புத்திரன் மரித்தாலும், பல வாபத்துகளால் மானபங்கம் வரினும், ஸ்வாமி கடாக்ஷம் விட்டு விலகினாலும், அரசிழந்தாலும்; சிநேகிதர்கள் நம்மை விட்டு விலகினாலும், முடிவின் நம பிராணனுக்கு ஆபத்து வரினும் கொஞ்சமாவது பொய் சொல்லக்கூடாது.

இந்த வாக்கியத்தையே தேவசபையில் தேவர்களும், ரிஷிகளும் சிரேஷ்டமானதென்று கொண்டிருக்கிறபடியால் முக்தி மார்க்கமடைய விரும்பும் ஒவ்வொருவரும் இந்நீதி வாக்கியத்தை அனுஷ்டித்தால் போறுமென்றும் இதனாலேயே முக்தி கிடைக்குமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் நாம் ஜெனித்த போது ஒரு புழுத்த பலவறையாவது கொண்டுவந்தோமில்லை. இனி நாம் செல்லும்போது ஒன்றையும் கூடக் கொண்டு போகிறதுமில்லை. ஆகையால் இச்சிரேஷ்டமான மானிட ஜென்மத்திற்குச் சத்தியமென்பதே மூலகாரண பீஜமாயிருக்கிறது. ஆகையால் நாம் எக்காரணத்தினாலும் பொய் சொல்லக்கூடாதென்பதாம்.

இதற்கு சமாதானம்.

பலிச்சக்ரவர்த்தியை சுக்கிரன் பொய் சொல்லச்சொல்லியும் அவர் சொல்லமாட்டேனென்றது.

பாரதம்.

(మ) నిరయంబైన నిబద్ధమైన ధరణీనిర్మూలనంబైన దుర్మరణంబైనఁ గులాంతమైన నిజముఁ రానిమ్ముకానిమ్ము పోహుచుడైనఁ హరియైన నీరజభవుండ భ్యాగతుండైన నాదిరుగన్నేరదు నా దుజిహ్వ నిను మా ధీవర్య వేయేటికిఁ

(ம) நிரயம்பைன நிபத்தமைன தாணீந்நிர்மூலநம்பைன துர்மரணம்பைன குலாந்தமைன நிஜமுன் ராணிம்முகா நிம்முபோஹரு

டைனன் ஹரியைன நீரஜபவுண்ட ப்யாகதுண்டைன நெவதிருகன் னேரது நாது ஜிஹ்வவினுமா தீவர்யவே யேடிகின்.

இதன் பொருள்.

உலகம் புறண்டாலும், துர்மரணமானாலும், குலநாசமானாலும், திரிமூர்த்திகளும் தேவர்களும் வந்து என்னை பொய் சொல்லச் சொன்னாலும் என் நாக்கினால் பொய் சொல்லமாட்டேன், ஏன், வீணாக உபதேசிக்கிறீர் இதில் பயன் என்னவென்று குருவுக்குச் சொன்னார் என்றவாறு. தவிர

பாரதம்.

(౧౦) మేరువు తలక్రిందైనను పారావారంబులింక బారినలోలో ధారుణిరజము పోయిన ధారాత్వము బద్ధమైన దప్పకయిత్తున్

(க) மேருவு தலகிர்ந் தைனனு பாராவாரம்பு லிங்கபாரினலோ லோதாருணிரஜமை போயின தாராத்வமு பத்தமைந தப்பகயித்துன்.

இதன் பொருள்.

மேருபர்வதம் தலைகீழானாலும், நதிகள்யாவும் சமுத்திரமடைந்து கடல் பொங்கியதனால் உலகமழிந்து போனாலும் எனது ராஜ்யம் போய் விட்டாலும் நான் சொன்னபடி மஹாவிஷ்ணுவுக்குத் தானம் கொடுப்பதைத் தவிர்க்கமாட்டேன் என்றனன் பலிச் சக்ரவர்த்தி என்றவாறு.

பீஷ்மாச்சாரியர் வாக்கியம்.

பாரதம்.

(౧౧) ప్రాణహానియైన బంధుహానియునైన విత్తహానియైన విడుముకడకు మానహానియైన మరియేమియైనను బొంకకుండువాడు పుణ్యతముడు

(கி) ப்ராணஹானியைன பந்துஹானியுநைன வித்தஹானியைன விடுமுகடகு மானஹானியைன மரியேமியைநனு பொங்ககுண்டு வாடுபுண்யதமுடு.

இதன் பொருள்.

பிராணன் போனாலும் பந்துக்கள் நாசமானாலும் தனதான்யங்கள் சேதமானாலும் மானபங்கம் வந்தாலும் இன்னும் சொல்லவொண்ணா வாபத்துகள் நேரிட்டாலும் பொய் சொல்லாதவனே புண்ணிய புருஷன் என்றவாறு.

கர்ணன் வாக்கியம்.

பாரதம்.

(శ్లో) సత్యస్యవచనం శ్రేయః సత్యాదపి హితంవదేత్ యద్భూత హితమ
త్యంత మేతసత్యం మతంమమ

(சு) ஸத்யஸ்ய வசனம் ஸ்ரேய: ஸத்யாதபிஹிதம் வதேத்
யத்பூத ஹிதமத்யந்தமேத சத்யம் மதம்மம.

இதன் பொருள்.

சத்திய வாக்கியமே சிரேஷ்டமானதாம் சத்தியத்தை அதிக இதத்துடன் சொல்லவேண்டும் நாம் சொல்லும் வாக்கியத்தால் இதர ஜீவன்களுக்கு அதிக திருப்திகொடுப்பதே சத்யமாகும் என்றவாறு.

சங்கராச்சாரிய ஸ்வாமிகள் வாக்கியம்.

விவேக சூடாமணி.

(శ్లో) సత్యాభిసంధా నరతోవిముక్తో మహత్వమాత్మీముపైతినిత్యం మిథ్యా
భిసంధా నరతస్తునశ్యే దృష్టంతదేత ద్యదచౌరచౌరయోః

ஸத்யாபிஸந்தாநரதோவிமுக்தோ மஹத்வமாத்மீ முபைதி நித்யம் மித்யாபிஸந்தா நரதஸ்த்து நஸ்யே த்ருஷ்டந்தேதத த்யத சௌர சௌரயோ:

இதன் பொருள்.

சன்மார்க்கர்கள் சத்தியத்தை யனுஷ்டித்து வருவதால் எப்போதும் மேன்மையடைவார்கள். ஏனெனில் தாங்கள் சத்திய வழியில் நடப்பதால்தான். அச்சத்தியத்தையே சதா விரும்புவ

தால் மகிமையும் நாளுக்கு நாள் விருத்தியடையும். அசத்திய வாதிகளென்றால் நரகப்ராப்திக்கு ஆளாவார்கள் அவர்கள் மேற்கூறிய சத்தியவானுக்கு நிகராக மாட்டார்கள் அசத்தியவான்கள் போலியாக நிஜத்தைப்பேசுவது போல நடித்தாலும் சத்தியவான்களாவார்களா? மாட்டார்கள். எப்படியெனின்—திருடர்கள் தாங்கள் திருடிய இனி திருடப்போகிற பொருள்களனைத்தும் தம்முடையதெனப் பாவித்துப் புகழ்ந்தாலும் உண்மையில் அப்பொருள்கள் அவர்களுடையதன்று.

பாரதம்.

(శ్లో) నాస్తివిద్యాసమంచక్షుః నాస్తి సత్య సమంతపః నాస్తిరోగసమందుఃఖం నాస్తిత్యాగసమం సుఖం

(சு) நாஸ்தி வித்யா சமம் சக்ஷு: நாஸ்தி சத்ய சமம் தப:
நாஸ்தி ரோக சமம் து:க்கம் நாஸ்தித்யாக சமம் சுகம்

இதன் பொருள்.

வித்தைக்குச் சரியான நேத்திரமில்லை வித்தையே கண்ணல்லாது வித்தையின்றி கண்ணிருந்தாலும் பயனில்லை. சத்தியத்திற்குச் சரியான தபசில்லை அச்சத்தியமின்றி தவமிருந்தாலும் அதனால் பிரயோஜனமில்லை. ஜீவர்களுக்கு ரோகத்துக்குச் சரியான துக்கம் மற்றொன்றில்லை. நிராசைக்கிணையான சுகம் வேறு கிடையாது. ஆசைக்கோ அளவற்ற துக்கம். சத்தியத்தை யனுஷ்டிப்பதால் லௌகீக வைதீக கர்மங்களுக்கும் இகபரங்களுக்கும் யாதொரு கஷ்டமும் இல்லை.

சகஜமாகவே உள்ளது சத்தியம்.

சுருதிப் பிரமாணம்.

(శ్రుతి) సత్యమేవ జయతే నానృతం

(சு) சத்யமேவ ஜயதே நாந்ருதம்.

இதன் பொருள்.

சத்திய விரதத்தை யனுட்டிப்பவர்கட்கு எக்காலத்திலும் எந்த ஆபத்துக்களும் வாராதாம். சந்தோஷமே உண்டாகுமாம். இதற்கு திருஷ்டாந்தம்.

ஓர் பூர்வீக கதை.

ஓர் பட்டணத்தில் தைரியவான் ஒருவனிருந்தனன். அவன் மிகவும் நுட்ப புத்திசாலி. எக்காரியம் செய்தாலும் என்ன ஆபத்து வந்தாலும் தைரியமாகவே செய்பாநிற்பான். அவன் பொய் சொல்லுதல் திருடுதல் கொலை களவு சூது முதலிய புன்மார்க்கங்களிலும்; காமம், குரோதம், லோபம், மதம், மாச்சரியம் இவைகளின் குணங்களும் நிறையப்பெற்றவன் இத்யாதி செய்கைகளால் அவன் மகாபாதகனானான். அவன் மெய்பேசி யறியமாட்டான், எப்போதும் திருடுவதும் பொய்ப்பத்திரங்களை சிருஷ்டித்து வஞ்சிப்பதுமே அவனுக்குத்தொழில். வெகு காலத்திற்குப்பின் அவ்வூருக்கு ஓர் பெரிய ஞானி ஒருவர் விஜயம் செய்தார், அந்த மகான் அவ்வூரில் ஓர் இடத்தில் மௌனமாகவே அமர்ந்திருப்பார். அவ்வூரிலுள்ள சகலரும் பெரியவர் உருவைக்கண்டு அவருக்கு பால், பழம், சர்க்கரை, ஆகாரமுதலியவைகளைக்கொண்டு சென்று வந்தித்தாலும் கொடுத்தாலும் சம்பாஷிக்கத் தொடங்கினாலும் அவர் பேசாமலே மௌனம் சாதித்துக் கொண்டிருந்தார். யேல்கண்ட பாதகன் அவரிடம் வந்து சுவாமீ அடியேனுக்கு ஏதேனும உபதேசித்தருள வேண்டுமென்று அவரடியில் விழுந்தான். மௌனம் சாதித்துக் கொண்டிருந்த மகான் அவனைக்கண்டதும் அன்போடுமுகமலர்ந்து உன் செய்கைகளை நீ உண்மையாக எனக்குச் சொன்னால் பின் உனக்கு உபதேசிக்கிறேன் என்றனர். அவன் சொல்லுகிறான் "சுவாமி நான் மகா பாதகன். அதோடு அசத்தியன்" என்று சொன்னான் இதைவிட எனக்கு இதரவித ஜீவனமும் கிடையாது ஆகையால் நான் அநேக கெட்டகாரியங்களை தைரியமாய்ச் செய்து ஜீவிக்கிறேன் என்றான் திருடன். அம்மஹான் சொல்லுகிறார் அப்பா நீ செய்துவரும் துஷ்டகாரியங்களில் ஏதாவது ஒரு காரியத்தை

விட்டுவிடுகிருயா என்று கேட்டார் அதற்கவன் சொல்லுகிருன். சுவாமீ (ஏதேது) நான் ஒன்றையும் விடமுடியாதென்ருன். மகான் சொல்லுகிருர், நான் உனக்கு உபதேசம் செய்யு அதை நீ கிரகித்துக்கொள்ள உன் நெஞ்சில் இடத்தைக் காணேமே உன் உள்ளமெல்லாம் கெட்ட எண்ணங்களாலேயே நிறைந்திருக்கின்றதே ஆகையால் நீ கட்டாயம் ஏதேனும் ஒரு கெட்டசெய்கையைவிட்டு விடுவையேயானுல் அந்தக்காலிபிடத்தில் என் உபதேசத்தை வைக்க முடியும் என்ருர். அதற்குத் திருடன் எதை விட்டுவிடட்டுமென, மகான் அப்பா நீ செய்யவேண்டிய கிருத்தியங்கள் யாவும் தைரியமாகவே செய்து ஜீவனஞ் பண்ணு, பொய் பேசுவதைமாத்திரம் எனக்கு குருதக்ஷிணையாகக் கொடுத்துவிடு பின்னுல் உபதேசிக்கிறேன் என்ருர். சுவாமி தாங்கள் எனக்கு எல்லாத் தொழிலைச் செய்பவும் இடங்கொடுத்திருக்கிறீர்கள் எல்லாத் தொழிலுமிருக்க இந்த பொய் பேசுவதால் ஆவதென்ன அந்தப் பொய்யை தங்களுக்குக் குரு தக்ஷிணையாய்க் கொடுத்துவிட்டேன் நானும் பொய்யை விட்டுவிட்டேன் இனி உபதேசியுங்கள் என்று பணிந்தான். உடனே குரு அப்பா உன்னைப் பரீக்ஷிக்குமாறு நான் இன்னும் ஒருவருடம் கழித்து இங்கு வருவேன் அதுவரை நீ பொய் பேசாதிருப்பையேல் உனக்கு உபதேசிக்கிறேன் என்று சொல்லிப் போய்விட்டார் பெரியவர்.

ஓர்நாள் இவன் உள்ளூரில் திருடப்போகும்போது அப்பட்டணத்தரசன் நகர்சோதனைக்காக பிச்சைக்காரனைப்போல் வேடம் பூண்டுக்கொண்டு வீதியில் வரும்போது இப்பொய்யைவிட்டுவிட்ட திருடனைச் சந்தித்தான். அப்போது அரசன் நீர் யார் என்ருன்? உடனே திருடன் மெய் சொல்லவேண்டியவனுனபடியால் நான் திருடன் என்ருன். உடனே அரசனுகிய பிக்ஷீகனுக்குச் சந்தேகம் பிறந்தது. என்னே? இவன் தன்னைத் திருடனென்று சொல்லிக்கொள்ளுகிருன் உண்மையில் இவன் திருடனுனல் சொல்லுவானுவென்றும் மீண்டும் அவனைப் பார்த்து நீ திருடன் என்று சொல்லுகிருயே உன் ஆயுதங்கள் எங்கேயென்றனன் அரசன்? அதற்கு அத்திருடன் தான் வைத்திருக்கும் கன்னக்கோல் முத

லீப சாமான்களைக் காட்டி விவரித்தான் திருடன். யாசகவேடம் பூண்ட அரசன் என்னையும் உன்னோடு சேர்த்துக்கொள்ளுகிருயா வெனத் திருடன் புதியவனுபிருக்கிருய் உன்னைச் சேர்க்கமாட்டே னென்றனன். உடனே அரசன் பணிவாக நீ சொன்னபடி நானும் செய்கிறேன் என்னைச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென வேண்ட திருடன் மனமிரங்கி அப்படியானுல் நம் இருவரில் உள்ளே புகுந்து திருடப்பட்டவனுக்கு திருட்டுசொத்தில் மூன்று பாகமும் வெளியி லிருந்து வாங்கிவைப்போனுக்கு ஒரு பாகமும் இப்படி பங்கிட்டுக் கொள்ள சம்மதமானுல் நீ என்னுடன் வரலாமென்றனன். அரசன் அதற்கு உடன்பட்டு யார்வீட்டில் திருடலாமெனக் கேட்டு யோசித்துக் கடைசியாய் அரசன் வீட்டிலேயே திருடுவதென்று தீர்மானித்து இருவரும் அரசன் வீட்டுக்குசென்று அரசனுல காட்டப் பட்டஇடத்தில் கன்னம்வைத்து ராஜாவை திருடன் கேட்கிருன். நீ உள்ளே போகிருயா அல்லது வெளியில் நிற்கிருயா என வினவ அரசன் எனக்கு அனுபவமில்லை நீயே செல்லென திருடன் உள்ளே சென்று திருடத்தொடங்கினுன். பார்த்தான் ராஜாவீட்டில் அநேக ஆபரணங்களிருக்கின்றன எதை எடுத்தால் நான்குபாகமாகட பங்கிடக் கூடுமென்று யோசிக்க அங்கோர் பெட்டியில் ஐந்து ஜீவரத்னங்களிருக்கக்கண்டு அவைகளில் நான்கு மாத்திரம் எடுத் துக்கொண்டு வெளியில் வந்து இதோ இதோடு ஐந்து ரத்னங்களி ருந்தன அவற்றில் நம்ம பாகத்திற்சேற்றபடி நான்கு மாத்திரம் கொணர்ந்தேன் என்று ஓர் இரத்தினம் மாத்திரம் அரசன் கையில் கொடுத்துவிட்டுத் திரும்பினுன் திருடன். உடனே அரசன் அவனை விளித்து உன் பெயர் என்ன உன் இருப்பிடம் எங்கே என வினவ தன் பெயர் சிவன் என்றும் தன் இருப்பிடத்தையும் அரசனுக்குச்சொல்லிப் போனுன். அரசனும் வீட்டிற்குப் போய் விட்டான்.

பொழுது விடிந்தது. காவல்காரர் அரசனிடம் களவு போன விஷபம் தெரிவித்தார்கள். உடனே அரசன் சினந்து திருடனைப் பிடித்து வாருங்களென்று கண்டிப்பாய்க்கட்டளையிட மந்திரி தக்க முயற்சி செய்தும் யாரும் அகப்படவில்லை பிறகு அர

சன் மேல்கண்ட திருடன் பெயரையும் அவன் இருப்பிடத்தையும் சேவகருக்குச் சொல்லி அத்திருடனை அழைத்துவாருங்கள் என்ருன். உடனே சேவகர்கள் அவனைப் பிடித்து அரசன் சமுகம் விட திருடன் யோசிக்கிருன் இரவு நம்மோடுவந்த ஒருவனுல்தான் வெளியாயிற்றென்று விதிப்படி நடக்கிறதென்று அரசனிடம் நடந்த யாவும் உண்மையே சொல்லிவிட்டான். அரசன் மந்திரியை நோக்கி இவன் சொல்லுவது உண்மையாவென்றறிய பெட்டியில் இன்னொரு இரத்தினமிருக்கிறதாவென்று பார்த்துவர கட்டளை யிட்டனன். உடனே மந்திரி அரசனில்லஞ்சென்று பெட்டியைத் திறந்துபார்க்க உண்மையாகவே ஓர் ரத்தினமிருக்கக்கண்டு அதை தான் அபகரித்துக்கொள்ளவெண்ணி அதைத் தன் வீட்டில் வைத்துவிட்டு அரசசமூகம் வந்து அங்கு ஓர் இரத்தினம்கூட இல்லை யென்றனன். ராஜா அவ்வார்த்தையை நம்பாமல் மந்திரிவீட்டை சோதனைசெய்ய அந்த ரத்தினமிருக்கக்கண்டு மந்திரியின் குற்றத்திற்காக அவரை வேலையினின்றும் நீக்கிவிட்டார்.

பிறகு திருடனைக் கூப்பிட்டு ரகசியமாய் நீ பூராவும் உண்மை சொன்னதற்குக் காரணமென்னையென வினவ அவன் தனக்கருளிய குருவின் உபதேசத்தைக் கூறினுன். உடனே அரசன் மகிழ்வடைந்து அத்திருடனுக்கு மந்திரிவேலை கொடுத்து தன்னிடமே வைத்துக்கொண்டார்.

இப்படி இவர்கள் மகிழ்ச்சியாய் வாழ்ந்துவரும் சமயத்தில் ஆதியில் உபதேசித்த குருவானவர் வந்தார். நடந்தனயாவும் கேட்டு சந்தோஷித்து இச்சத்தியத்தாலேயே உனக்கு இகபர சாதனம் கிடைக்குமென வாசிகூறி தமதிருப்பிடம் சென்றனர் மகான்.

ஆகையால் இச்சத்தியத்தையனுஷ்டிப்பதற்கு தனம், யாகம், யாத்திரை இவைகள் வேண்டியதில்லை. இப்படி எளிதாயுள்ள சத்தியத்தை அனுசரிப்பதில் அவர்களுக்குஎன்ன குறையிருக்கிறது சத்தியவான்களிடம் தரித்திரமிருந்தாலும் பயமில்லை. சத்தயவிரதமே சாஸ்வதமானது.

அதற்கு உதாரணம்.

பகவத்கீதை.

(శ్లో) యత్కరోషి యదశ్నాసి యజ్జుహోషి దదాసియత్
యత్తపస్యసికౌంతేయ తత్కురుష్వమదర్పణం

(சு) யத்கரோபி யதஸ்னாஸி யஜ்ஜுஹோஷிததாஸியத்
யத்தபஸ்யஸி கௌந்தேய தத்குருஷ்வ மதர்பணம்

இதன் பொருள்.

அர்ச்சுனா பத்திரபுஷ்பங்களால் அர்ச்சனை செய்வதற்குப் பிரயாசையாயிருந்தால் நீ எதைச் சாப்பிடுகிறாயோ எந்த கர்மத்தைச் செய்கிறாயோ எதனால் யாகம் செய்கிறாயோ எதை தானம் செய்கிறாயோ எதை விரும்பி தபம் செய்கிறாயோ அவைகளை எனக்கு அர்ப்பணம் செய்தால் அதுவே எனக்கு திருப்தி என்றவாறு.

ஆகையால் சத்கதியாகிய மோக்ஷத்தையடைவதற்கு யாதொரு கஷ்டமும் இல்லை. சத்தியமாக நடக்கின் நமது குணங்கள் விபரீத மார்க்கத்திற்குப் போகா நம் பிராணாந்தியத்தில் அச்சத்தியமே நமக்குத் துணையாகி கடவுளின் பாதகமலங்களில் மனது லயித்து மோக்ஷமடையும் வழி காட்டுகிறது.

இதற்கு உதாரணம்.

பாகவதம்.

(గీ) నాకు మేలుగోరు నాభక్తుడగువాడు భక్తజనులకేన పరమగతియు
భక్తుడెందు జనిన బరతెంతు వెనువెంట గోవు వెంటదగులు కోడెపగిది

(கி) நாகுமேலுகோரு நாபக்துடகுவாடு
பக்தஜனுலகேனபரமகெதியு
பக்துடெந்துஜெனினபாதெந்துவெனுவெண்ட
கோவுவெண்டதகுலுகோடேபகிதி.

இதன் பொருள்.

என் பக்தனாகிய மெய்யடியான் என்னுடைய மேன்மையைக் கோரி அந்தப்படி வகிப்பான். அத்தகைய பக்தனை ஆதரிப்பது எனக்கு முக்கியமான கடமையாயிருக்கிறது. காமதேனுவின் பின்னர் கன்று செல்வதுபோல் என் பக்தன் எங்கேயிருந்தாலும் நானும் அங்கே இருப்பேன் என்றவாறு.

பகவத் கீதை.

(శ్లో) అంత్యకాలేచ మామేవస్మరన్ముక్త్వాకళేబరం
యఃప్రయాతిసమద్భావంయాతినాస్త్యత్ర సంశయః

அந்த்யக்காலேச மாமேவ ஸ்மரன் முக்த்வா கலேபரம்
யப்ரயாதி ஸமத்பாவம் யாதிநாஸ்யத்ர ஸம்ஸய:

இதன் பொருள்.

அர்ச்சுனா அந்தியகாலத்தில் என்னையறிந்து என்னையே நினைத்துக்கொண்டு தேகத்தை விட்டவர் என் ரூபத்தைபடைகிறார் என்பது நிச்சயம் இதற்ஐயமில்லை என்றவாறு.

ஆகையால் நாம் சத்தியமாயிருப்போமாகில் யாதொரு பயமும் இல்லை ஏனெனில் எவ்விஷயங்கட்கும் சத்தியமே நிஜஸ்வரூபமெனத் தெரியவருகிறது. இதற்கு உதாரணம்—

வேமனஸ்வாமிகள் வாக்கியம்.

(కం) చిత్తశుద్ధిగలిగిజేసిన పుణ్యంబు కొంచమైనదదియుకొదువగాదు విత్తనంబుమఱ్ఱివృక్షంబునకునెంత విశ్వదాభిరామవినరవేమ.

சித்தசுத்தி கல்கி ஜேசின புண்யம்பு கொஞ்சமைன ததியு கொதுவகாது வித்தனம்பு மர்ரி வ்ருக்ஷம் புனகுனெந்த விஸ்வதாபிராம வினரவேமா.

(இதன் பொருள்.)

ஆலம்விதை சிறியதாயிருந்தாலும் எப்படி பெரியதாய் மரமாய் அளாவியிருக்கிறதோ அப்படியே சத்திய விதிப்படி நடந்து

செய்த புண்யம் கொஞ்சமானாலும் அதுவே மோக்ஷத்தைக் கொடுக்கும் பயன்தரும் என்பதாம்.

ஆகையால் உண்மையேயன்றி, ஒருபோதும் பொய் பேசக்கூடாதென்றும் அப்பொய் கடவுளுக்குச் சம்மதமல்லவென்றும் தெரியவருகிறது. இக்கலியுக ஆரம்பத்தில் நடந்த பாரதயுத்தத்தில் தருமராஜன் ஒரு பொய் சொன்ன மாத்திரத்தினாலேயே அக்காரணமாகப் பின்பு தருமராஜனுக்கு ரவுரவாதி நரகக்கும்பிகளின் தரிசனமாயிற்று என்பதையும் யோசிக்குங்கால் பொய்யினால் நன்மை பொன்றுமென்றே புகலவேண்டியிருக்கிறபடியால் எக்காரணத்தினாலும் பொய் பேசக்கூடாதென்பதாயிற்று. ஆகையால் சகலரும் சத்தியததையே அனுஷ்டித்து அதி உன்னதமான பதவியைப் பெறப் பிரார்த்திக்கிறேன்.

சுபம். சுபம். சுபம்.

சுபமஸ்து.